சுயராஜ்யப் பித்தலாட்டம் அம்பலமாகும் பரிதாபம்!

Phone No. 4502
விலை அணா ஒன்று

Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.
MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (28—11—49) வெளியீடு (29—11—49) [இதழ் 102

அரசியல் வகுத்த அம்பேத்காரே அறைகூவியழைக்கிறார் 'தேசீயத்தை'!

"சமூக—பொருளாதார சமத்துவமற்ற முரணிய வாழ்வில்தான் நுழைகிறோம்"

நசுக்குண்ட மக்களை நலியவைத்து நாசத்துக்குப் பாதைபோடாதீர்!

பக்தகோடிகள் மண்டையிலடி : 'ஆகஸ்டாருக்கு' அறிவுறுத்தல்!

1950 ஜனவரி 26-ந் தேதியன்று முரண்பாடுகள் நிறைந்த வாழ்வை மேற்கொள்ளப்போகிறோம். அரசியலில் நமக்கு சமத்துவமிருக்கும், பொருளியல்-சமுதாய இயல்களில் ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்து நிலைபெறும். இம் முரண்பாட்டை வெகு விரைவில் நாம் களைந்தாக வேண்டும். இல்லையேல், ஏற்றத்தாழ்வுகளால் வதையுறும் மக்கள், இச்சபை பலகாலம் அரிது முயன்று வகுத்த அரசியல் ஜனநாயக அமைப்பையே தகர்த்தெறிந்து விடுவர்.

ஆயிரமாயிரம் ஜாதிகளாகப் பிளவுபடுத்தப்பட்டுக் கிடக்கும் மக்கள் ஓரினமாவது எங்ஙனம்? இந்த ஜாதிகள் சமுதாய வாழ்வில் பிரிவினையை ஏற்படுத்துவதால் தேசியத்துக்குப் புறம்பானவை யல்லவா? ஜாதிக்கு ஜாதி பொறாமை, பொல்லாமை யுண்டாக்குவதாலும் இவை தேசியத்துக்கு மாறானவை யென்பது விளங்கவில்லையா? சமத்துவம், சகோதரத்துவம் நிலைபெறா இடத்தில், விடுதலை வெறும் சாயப் பூச்சே; அது நீண்ட நாள் நிலைக்காது.

அரசியலதிகாரம் என்பது இந்நாட்டில் நீண்ட நாளாக ஒரு சிலரின் ஆதிக்கத்திலேயே இருந்து வந்திருக்கிறது. பெருவாரியாக மக்கள், பொதி சுமப்போராய் மட்டுமன்றி, ஆதிக்கக்காரரின் வேட்டைப் பொருள்களாகவு மிருந்து வந்திருக்கின்றனர். இதனால் அவர்களது நல்வாழ்வு பறிக்கப்பட்டுப் போனதோடு, வாழ்க்கையின் முக்கியத்துவமும் பறிபோய் விட்டது. அடக்கியொடுக்கப்பட்ட இம்மக்கள் அடிமைப் படுகுழியில் உழன்று உழன்று, சலித்து விட்டனர்.

அடக்கி யொடுக்கிப் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கும் வகுப்பாரிடையே கிளர்ந்தெழுந்திருக்கும் தன்மான-தன்னுணர்வு சக்தியினை வகுப்புக் கிளர்ச்சியாகவோ, வகுப்புப் போராகவோ உருக்கொள விட்டுவிடுதல் கூடாது; அப்படி விடுதல் அழிவுக்கு வழிகோலியதாகவே முடியும்.

சுதந்திர இந்தியாவின் 'தேசிய' அரசியலமைப்புசபையில், வெற்றி மயக்கத்தில 'விருதுகள்' பலவோடு வீற்றிருந்த 'தேச பக்தர்கள்' பல நூற்றுவர் மத்தியில், கடந்த 25-ந் தேதி யன்று இக் கருத்தோவியங்கள் தீட்டிக் காட்டப்பட்டன. காந்தி மகாத்மா பெருந்துணையால், நேரு-படேல நற்றுணையால் சுயராஜ்யம் பெற்றுவிட்டோம். சமூக வாழ்வில் நுழைகின்றோம் என்றக்ளியாரவாரத்தோடு அமர்ந்திருந்த அவர்களுக்கு இக் கருத்துச் சுவர் கலக்கத்தையே தந்திருக்கும். 'இதன்கண் இலலாத தொன்றில்லை;பரந்த மாபெரும் அரசியல்கொண்டு பல கோடி மக்களை ஆளப் புகுவோம்'எனக்கூறி அடுத்தத்தேர்தலில் 'பாருக்குச் சான்றோ' என்று எதிர்பார்த்திருந்தஎண்ணற்றக்' கைத் தூக்கிகளுக்கு' ஏக்கத்தைத்தான தந்திருக்கும் இவ் வெழுச்சிக் குரல்!

இந்திய உபகண்டத்தின் லட்சாதி லட்சம் பாமர—பொது மக்களின் இவ்வுரிமைக்குரலை அன்று அவர்கள அரசியலமைப்பு சபையில் எதிர் பார்க்கவேயில்லை. நம்மால் வரவழைக்கப்பட்டு, வேலைக்கு [illegible] காள்ளப்பட்ட அம்பேத்கார் நமது சட்ட திட்டங்களை மீறி, அப்பாலாயப் போய்விடுவாரா, புதிய அரசியல்பற்றி யெழுந்தகண்டனக் கணைகளுக்கு மட்டும 'தக்கவாறு' பதில் கூறி, சட்டென அமர்ந்துவிடுவார'' என்றே எண்ணியிருப்பர் நம தேச பக்த சிரோமணிகள்! கண்டனங்களுக்குப் பதில் சொல்ல மட்டுமே எதிர்பார்த்து அனுமதிக்கப்பட்ட அம்பேத்கார், 'எதிர் காலத்தைப் பற்றியும் பேசுவார்' என்று யாருக்குத் தெரியும்? 'சீனாவில மோசி-துங் வெற்றிச் செய்தியைக் காட்டிலும் 'காண-கொடூர, பாயிருக்கிறது இந்த பனிதன் எதிர் காலத்தைபபற்றித் தீட்டும் சித்திரம்' என்று எண்ணும் 'தேசபக்தா' அன்று சபையில ஒருவராகிலும் இருந்திருக்க மாட்டார். பாவம், மங்களகரமான வேளையில் பகருவதோடு பேச வேண்டாமா, அம்பேத்கார்! அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தை யெல்லாம் இப்படியா, ஒரே அடியாக் கொட்டிவிடுவது!

யாரோ, எங்கோ, எதற்காகவோ பேசவேண்டிய

[தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க]

ஆங்கிலோ-அமெரிக்க ஏகாதிபத்தியம் கதிகலங்கி நிற்கிறது!

மூன்றாவது பயங்கர உலகப் போருக்கு முஸ்தீபு செய்யும் வெறிக்கும்பல்

:0:

அனைத்திந்திய சமாதான மாநாட்டு நிகழ்ச்சிகள்

:(O):

நேரு சர்க்கார் போக்குக்குக் கண்டனம்

அனைத்திந்தியத் தொழிற் சங்கக் காங்கிரஸ் ஏற்பாடு செய்த அனைத்திந்திய சமாதான மாநாடு கல்கத்தாவில் 24-ந் தேதியன்று கூடியது. 'போர் வெறியை' எதிர்த்து மக்கள கருத்தைத்திரட்டுவதே இம்மாநாட்டு நோக்கமாகும். மாநாட்டில், 2,950 பிரதிநிதிகள கலந்துகொண்டனர் பாகிஸ்தானிலிருந்து மட்டும் 100 பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

மாநாட்டுக்குத் தலைமைதாங்கவிருந்த பிரபல நீக்ரோ பாடகர் பால்ரோப்சன்வர இயலவில்லையாகையால், அறுவர்கொண்ட தலைமையில் தோழர் வி. சக்கரை அவர்கள் முன்னின்று நடத்த, மாநாடு ஆரம்பமாயிற்று.

சோவியத் யூனியன், வைட் – நாம் ஆகிய இடங்களிலிருந்து வரவிருந்த பிரதிநிதிகளுக்கு அனுமதி கொடுக்க மறுத்த இந்திய சர்க்காரின் போக்கைக் கண்டித்துத் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

சமாதானத்தை சித்தரிக்கும் புறாவொன்றின் இருபுறமும் ஸ்டாலின, மோசிதுங் உருவப் படங்கள் வைக்கப்பெற்று, அணிசெய்யப்பட்டிருந்தது. மாநாட்டு நடவடிக்கைகளனைத்தும, கம்யூனிஸ்ட் சோவியத் ஆதரவு ஒலிகளால வரவேற்கப்பட்டன.

கடல்கடந்த நாடுகளிலிருந்தெல்லாம் கம்யூனிஸ்ட் பிரபல தலைவர்களும், இடதுசாரிக் கட்சியினரும் பாராட்டுச் செய்திகள் அனுப்பிவைத்திருந்தனர்.

கல்கத்தா, டம்டம் சிறையினின்று காவற் கைதிகள் அனுப்பி வைத்திருந்ததாகக் கூறப்படும் செய்தியொன்று,

"நேரு சர்க்காரை முட்டித் தள்ளிவிட்டு, சமாதான வீரா கூட்டம் அணிவகுத்துச் செல்லத்தான் போகிறது."

என்று குறிப்பிட்டது.

ஹௌராவைச் சேர்ந்த மாது ஒருவர் பேசுகையில், கூட்டத்தில பெருத்த கைத்தட்டலும் ஆமோதிப்புமிருந்தது; அவரது பேச்சு அப்படியே வரவேற்கப்பட்டது. 'இன்னொரு போர் மூளத்தெழும்பட்சத்தில், நானும், எனது தோழியர்களும் எங்களது கணவன்மார்களையும், மக்களையும் சோவியத் ரஷ்யாவுக்கு எதிராகப் போர்க்களத்துக்கு அனுப்பப் போவதில்லை' என்று குறிப்பிட்டார்.

தோழர் சக்கரை அவர்கள் தனது தலைமையுரையில், உலகைப் போர்ப் பாதையில் திருப்ப வெறியர்கள் மேற்கொள்ளும் போக்கைக் கண்டித்து பொது மக்கள்இதுபற்றிய தங்களது கருத்தைத் திரட்டித் தர வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:— 'பாரிஸ் சமாதான மாநாட்டிலிருந்து சமாதான இயக்கம் நாளுக்குநாள வளர்ந்து வந்து கொண்டிருக்கிறது. சோவியத் ரஷ்யாவில மட்டுமன்றி, மக்கள் ஜனநாயகங்களிலெல்லாம் இவ்வளர்ச்சி காணப்பட்டு வருகிறது. ஆங்கிலோ-அமெரிக்க ஏகாதிபத்தியத்தினருக்கு-போர் வெறியர் கட்டுக்கடங்காத பீதியைஉண்டாக்குவது இயல்பே. இந்தப்பயத்தில்அவர்கள் மேற்கு நாடுகளில்—பிரான்ஸ் பெல்ஜியம், மேற்கு ஜெர்மனி நாடுகளில்—இராணுவப்படைகள் தயாரிப்பில் ஈடுபட்டு விட்டனர் எனவே நாம் சமாதானத்தை நோக்கி நம் முயற்சியைத் திருப்பி, உண்மை விடுதலையின் அழிவிலிருந்து தங்களது கோட்டை கொத்தளங்களை அமைக்க விழையும் வெறியர்களின் ஆயுதங்களைத் தகர்த்து வீழ்த்த முனைவோமாக"

பண்டித நேரு அண்மையில் அமெரிக்கா சென்று திரும்பியது பற்றிப் பேசுகையில, தோழர் சக்கரை குறிப்பிட்டதாவது: "நேருவுக்கு அளிக்கப்பட்ட மாபெரும் வரவேற்புகளை, அக்கரை கொண்ட பத்திரிகைகள் பத்தி பத்தியாக விளம்பரஞ் செய்துள்ளன. அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்குமிடையே நேசஉறவு வளர்கிற தென்று குறிப்பிட்டிருக்கின்றன. உண்மையான நேசமுறைக்கு இவையெல்லாம் தேவையாயென்று கேட்கிறேன். உள்ள அன்பு ஒன்று மட்டும் இருந்தால் போதுமே."

இந்திய நாட்டுப் பாட்டாளிகளும், விவசாயிகளும்,அறிவாளிகளும் ஜனநாயக சக்திகளின் பக்கபலமாயிருப்பார்களெனத் தான் நம்புவதாயும் தோழர் சக்கரை அவர்கள் இறுதியாகக் குறிப்பிட்டார்.

"ஆங்கிலோ-அமெரிக்க 'இராணுவத்தள'மாகிறது இந்தியா"

தேசீய சீனவீழ்ச்சிக்குப் பின் இந்தியா மீது யு. எஸ். கண் வீச்சு!

சோவியத் 'பிராவ்தா' எச்சரிக்கை

கிழக்குப் பகுதியில் ஆங்கிலோ—அமெரிக்கக் குழுவினரின 'இராணுவப்பட்டாளமாக' இந்தியாவை ஆக்கிவருகிறது நேரு சர்க்காரென்று, சோவியத கம்யூனிஸ்ட் இயக்கப் பத்திரிகை பிராவ்தா' நவ. 25-ந் தேதியன்று குற்றஞ்சாட்டியுள்ளது.

'பிராவ்தா வில் மேற்படி கட்டுரையைத் தீட்டியுள்ள எம். தியாக்கோவ் மேலும் கூறுவதாவது:

"சீனாவில தேசீய வாதிகளின் (சியாங் கட்சியின்) வீழ்ச்சிக்குப்பின, அமெரிக்கா இந்தியாமீது தனது கவனத்தைத் திருப்பியுள்ளது. வரலாறு அண்மையில காட்டிவரும் பாடம [illegible]திபத்தியங்களுக்கொரு எச்ச[illegible]."

இந்தியாவுக்குக் கோதுமை

இந்திய சர்க்காருக்கும் அர்ஜெண்டைனாவுக்கு மிடையே நடந்திருக்கும் ஒப்பந்தமொன்றையொட்டி, இந்தியாவுக்கு 390,000 டன் கோதுமை வந்து சேருமெனத் தெரிகிறது. இதற்குப் பதிலாக அர்ஜெண்டைனாவுக்குச் சணல் பொருள்கள் அனுப்பப்படுமாம். மொத்த கோதுமையும் 1950-ம் ஆண்டுக்குள் இந்தியா வந்து சேர்ந்துவிடுமென்று கூறப்படுகிறது.

மாலை மணி

சென்னை 28—11—49 திங்கட்கிழமை

ஆணவம் அல்ல; : : அறிவுடைமை!

காங்கிரஸ் ஆளவந்தார்களின் ஆட்சியில், நாட்டிற்கு நன்மை பயக்கும் நற்செயல்கள் எதும் நிறைவேறவில்லை என்றாலும், வேடிக்கை யுணர்த்தும் செயல்கள் மட்டும் விதவிதமாக நடைபெற்று வருகின்றன

ஆளவந்தார்களுக்கு நாடு சுற்றித்திரிவதிலே உள்ள அளவு பயிற்சி, நாடாளுவதிலே இருந்ததில்லை; இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புவதாகவும் தெரியவில்லை பயிற்சியில்லை, எனவே நிர்வாகத்திலே பக்குவம் இல்லை பக்குவந்தான் இல்லை என்றாலும், பயிற்சி பெற்றோரின் துணை நாடுவோம் என்ற பண்பாவது இருக்கிறதா என்றால், அதுவும் இல்லை! ஆட்சிபீடம் ஏறியுள்ளனர்; அது தங்கள் "அதிருஷ்டம்" என்று கருதுகின்றனர். ஆளுகைக்கு அறிவைத் துணைக்கழைக்க விரும்பாமல், ஆணவத்தைத் துணைக்கழைத்துக் கொள்வதிலே விடாப்பிடியினராக இருந்து வருகின்றனர்.

ஆளவந்தார்கள் அப்படி இருப்பதன் விளைவாகத்தான் விதவிதமான திட்டங்கள் கிளம்புகின்றன; அவை விசித்திர வழிகளிலே செலுத்தப் படுகின்றன; விபரீத முடிவுகள் விளைகின்றன. இறுதியில் கணக்கெடுத்தால் காலக்கேடு பொருள் கேடு, உழைப்புக்கேடு இவைதாம் மிச்சப் படுகின்றன. இப்படிப்பட்ட விளைவுகளை உண்டாக்கிவரும் திட்டங்கள்தாம் கதர் திட்டம்—குடிசைத் தொழில் திட்டம்-கிராம புனருத்தாரணத் திட்டம்—தேசீய மொழித் திட்டம் முதலியன.

காங்கிரஸ் அரசியலார் அடிப்படைக் கல்வித் திட்டம் என்ற ஒன்றை வகுத்துக் கொண்டு, அதைப்பற்றிப் பெருமையாகப் பேசி வருகிறார்கள். சப்தம் எழும்புகின்ற அளவுக்கு அதில் சத்து இருப்பதாகத் தெரியவில்லை அடிப்படைக் கல்வித் திட்டத்தை, வெகு பாடுபட்டு சென்னை சர்க்கார் வகுக்க, அதனை அடிப்படையாகக் கொண்டு 'ஹிந்துஸ்தானி தாலமி சங்கம்' இரண்டு புத்தகங்களை வெளிக்கொண்டு வந்திருக்கிறது அதைப்படித்துப் பார்ப்போர்க்கு, அப்படிப்பட்ட கல்வியின் நோக்கந்தான் என்ன என்பது தெளிவாக அறிந்துகொள்ள முடியாமலே இருந்து வருகிறது. கல்வி மந்திரியாரை யாரேனும் அது பற்றிக் கேள்வி கேட்டால், அடிப்படைக்கல்வி போதிக்கப்படுகின்ற இடங்களில் சென்று பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள் என்று கூறிவிடுகிறார்.

சென்னை அரசியலார் வகுத்திருக்கும் அடிப்படைக் கல்வி முறை, யாதொரு பலனையும் தரக்கூடிய விதத்தில் அமையவில்லை என்ற கருத்தை, கல்வி அதிகாரிகளும், ஆசிரியர்களும், கல்வித்துறையில் நிபுணரான பலபேரறிஞர்களும் கூறுகின்றனர். "அடிப்படைக் கல்வித் திட்டத்தைப் பற்றிக் கல்வி அதிகாரிகளே குறை கூறுகிறார்கள், அவர்கள் அப்படிக் கூறுவது அரசாங்கத்தை அவமதிப்பதாகும்" என்று கல்வி மந்திரி கூறுகிறார். திட்டத்திலுள்ள குறைகளை எடுத்துக் கூறக் கூடாது என்பதிலே கல்வி அமைச்சர் காட்டும் அக்கரையில், ஒரு சிறிதளவாவது திட்டத்திலே உள்ள குறையைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்பதிலே இருந்தால், இந்த நாடு எத்தனையோ நாட்களுக்கு முன் நன்னிலை எய்தியிருக்கும்.

திட்டத்தைப் புதிதாகவும், காந்திய அடிப்படையிலும் அமைக்கவேண்டும் என்பதில். காங்கிரஸ் சர்க்கார் காட்டும் ஆர்வம், திட்டம் அறிவுடன் பட்டதாகவும், வாழ்க்கைக்கு ஒத்துவரக்கூடியதாகவும் இருக்கவேண்டும் என்பதில் இருப்பதாகத் தெரியவில்லை

பெற்றோர்களும் கூட இந்த அடிப்படைக் கல்வி முறையை விரும்புவதாகத் தெரியவில்லை. அடிப்படைக் கல்வியின் நோக்கத்தைக் கல்வி மந்திரி கூறும்போது. "குழந்தையின் அறிவு எல்லாவித துறைகளையும் பற்றி அறிந்து கொள்ளும் விதத்தில் ஊக்குவிப்பதே, அடிப்படைக் கல்வியின் நோக்கம்" என்று கூறுகிறார். எந்த ஒன்றையும் பற்றி முறையாக-படிப்படியாக- ஒழுங்காக கற்றுக்கொள்வதற்கு வாய்ப்பளிக்காமல், நூல் நூற்பது-நெய்வது-தச்சவேலை செய்வது போன்றவைகள் உள்பட, பலவற்றையும் பற்றிக் கொஞ்சம் கொஞ்சம் தெரிந்து கொள்ளும்படியான முறையில் வகுத்திருப்பது இளம் மாணவர் உள்ளத்தின் மீது தேவையற்ற பாரத்தை ஏற்றுவதாகும்.

இளம் மாணவர் உள்ளம் ஏற்றுக்கொள்ளும் அளவுக்குப் பயிற்சி அளிக்காமல், அவர்கள் உள்ளம் வளையும் அளவுக்குப் பாரம் ஏற்றினால், அந்தப் பயிற்சி மாணவனுக்கும் பயன்படாது! நாட்டிற்கும் நல்லது பயக்காது.

முறையாகக் கல்வி போதிக்கும் பயிற்சியை விட்டு விட்டு, கதம்பமாகக் கொடுக்க முயற்சிப் பதால் அறிவு பாழ்படும்; நேரம் பாழ்படும் நினைப்பு பாழ்படும், உழைப்பு பாழ்படும்; பொருள் பாழ்படும்! ஆகவே, கல்வித் திட்டத்தை அறிவு வகுக்க வேண்டுமேயல்லாமல்

ஆணவம் வகுக்கக் கூடாது! அறிவுக்கு இடம் அளிக்கப்பட்டால் கல்வியும் வளரும்; நாடும் வளம்பெறும்! எனவே அமைச்சர்களுக்கு வேண்டுவது ஆணவம் அல்ல, அறிவுடைமை அமைச்சர்கள் உணர்வார்களா?

அரசியல் தயாரிக்கப் பிடித்த செலவு

கடந்த மூன்றாண்டுகளில் அரசியலமைப்பு சபையின் வேலைகள் பற்றிய புள்ளி விவரம் அமயிற் [illegible] யாருமெனக் [illegible] பிடப்படுகிறது. இந்த நவம்பர் 22-ந் தேதிவரை கடந்த மூன்றாண்டுகளாகத் துக்கும் பிடித்த செலவு ரூ. 63,96,7_9. மொத்தத்தில் 11 கூட்டங்கள் 165 நாட்களில் நடைபெற்றிருக்கின்றன. அரசியல் நகல் ஆலே சனைக்கு மட்டும் இதில் 114 நாட்கள் பிடித்தன. 1947 ஆகஸ்ட் 29-ல் நிறுவப் பெற்ற நகல் கமிட்டி 141 நாட்களமர்ந்து அரசியல் நகலைத் தயாரித்தது.

இப்போது நிறை வேற்றப்பட்டிருக்கும் அரசியலில் 395 விதிகளும் எட்டு ஷெட்யூல்களுமுள்ளன. முதற்கண் [illegible] ரிக்கப்பட்ட திருத்தப் பிரேரணைகள் 7,635 ஆகும்; இவற்றுள் சபைக்குக் கொண்டுவரப்பட்டவை 2,473 திருத்தங்களே யாகும், நகல் கமிட்டி 315 விதிகளும் எட்டு ஷெட்யூல்களுமே தயாரித்துக் கொடுத்திருந்தது.

இந்திய சர்க்காருக்கு அறிவுறுத்த...!

உணவுப் பொருள்களின் விலை விஷம்போல் ஏறிக்கொண்டிருப்பதைத் தடுத்து, மக்களுக்கு நேரிட்டு வரும் தொல்லைகளைத் தீர்க்கும் வகையில் உடனடி வழிமுறைகளெடுக்க வேண்டும், இந்திய சர்க்காரென்பதாக வற்புறுத்தும் தீர்மானமொன்றை ஆலோசிக்க நகரசபையின் சிறப்புக் கூட்டமொன்றுக்கு ஏற்பாடு செய்யுமாறு சென்னை நகரசபையைச் சேர்ந்த 14 உறுப்பினர்கள் மேயரைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மதுவின் மகத்துவம்! லண்டன் குடியர்கள் பேச்சு!

அண்மையில் லண்டனில் 100 டாக்டர்கள் கூடி மதுவின் மகத்துவம் பற்றி பேசியிருக்கின்றனர். அவர்களில் டாக்டர் ஜான் டென்ட் என்பவர் சாராயத்தால் உடலில் ஊறும் எரிச்சலூட்டும் ரசாயனப் பொருள்கள் சமன் செய்யப்படுவதாகவும், நாகரிக வாழ்க்கை நடத்துவதை அது சுலபமாக்குவதாகவும், ஓவிய சங்கீத வித்வான்கள், கவிஞர்கள் முதலியோர் உன்னத நிலை அடைய மது வகைகள் உதவி செய்திருப்பதாகவும் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், "போதைப் பொருள் இல்லாமல் எந்த நாகரிகமும் வளர்ந்ததில்லை' என்றும் கூறினார். டாக்டர் டென்ட் விடாக் குடியர்களுக்குச் சிகிச்சை செய்யும் நிபுணரும், பிரிட்டிஷ் சாராயக் குடிப்பழக்கப் பத்திரிகையின் ஆசிரியருமாவார் என்றும் சொல்லப்படுகிறது.

சட்டசபை உறுப்பினர்களுக்குத் தகுதி என்ன?

இந்திய அரசியல் இந்திய மொழியில் இல்லையே!

டாக்டர் ராஜேந்திர பிரசாத்தின் கவலை

1. சட்டசபை உறுப்பினர்களுக்கு யோக்கியதாம்சங்கள் நிர்ணயிக்கப்படவில்லை
2. சுதந்திர பாரதத்தில் அரசியல் இந்திய பாஷையில் இல்லை.

இந்த இரண்டு விஷயங்களில் மாத்திரம் எனக்கு வருத்தம்."

என்று அ. நி. சபைத் தலைவர் டாக்டர் ராஜேந்திரபிரசாத், அ. நி. சபையின் அரசியல் திட்டம் நிறைவேற்றப்படும் வேளையில் தனது குறையைத் தெரிவிக்கிறார். இந்தியாவின் எதிர்கால அரசியல் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விதத்தைக்கண்டு பலர் தத்தம் கருத்துக்களையும், குறைகளையும் எடுத்தியம்பி இருப்பதைவாசகர்கள் அறிவர் பொதுவாக இந்த அரசியல் ஜனநாயக அடிப்படை மீது அமைக்கப்படவில்லை என்பது அறிஞர்கள் கருத்து. இந்நிலையில் தனது இருபெரும் குறை மேலே காட்டப்பட்டிருக்கும் விஷயங்களைக் குறிப்பிடுகிறார்களாகதோழர் ராஜேந்திர பிரசாத்என்றால் இது எத்துணை நகைப்புக்கிடந்தரும்என்பதை சிந்தித்துப்பாருங்கள்.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள அரசியலின் யோக்கியதாம்சம் எப்படி என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் அந்த அரசியலில் சட்டசபை உறுப்பினர்களாகவருபவர்களின் யோக்கியதாம்சம் பற்றி கவலைப்படுகிறார் அவர், சட்டசபை உறுப்பினர்களுக்கு யோக்கியதாம்சம் வேண்டுமாம்! யோக்கியதாம்சம் என்று எதைக் கருதிக்கொண்டு இங்ஙனம் பேசுகிறாரோ தெரியவில்லை. இதுவரும் காங்கிரஸ் ஆட்சியார் சட்டசபை உறுப்பினர்களிடமிருந்து யோக்கியதாம்சம் என்ற முறையில் எதிர்பார்த்தது என்ன? ஆள் சிறை சென்றவரா; ஆகஸ்ட்டு தியாகியா, அல்லது ஆகஸ்ட்டு துரோகிய; கதராடை உடுத்துகிறாரா; காந்தி பஜனையில் ஈடுபடுவாரா? எதிர்கட்சிக்காரர்களை ஏசத் தெரிந்தவரா? சட்டசபையிலே கைதூக்க வேண்டிய நேரத்தில் கைதூக்கும் பண்பினரா என்பவைதானே சட்டசபை உறுப்பினர்களிடமிருந்து காங்கிரஸ் தலைவர்கள் எதிர்பார்த்த யோக்கியதாம்சங்கள் இத்தகை யோக்கியதாம்சங்கள்வாய்க்கப்பெற்ற புண்ணியவான்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் தானே அ. நி. சபை உறுப்பினர்கள், அந்த உறுப்பினர்களால் உருவாக்கப்பட்ட அரசியல் தானே தற்போது தயாரிக்கப்பட்டிருக்கும் புது அரசியல் திட்டம்?

எனவே, சட்டசபை உறுப்பினர்களுக்கு யோக்கியதாம்சம் பற்றி தோழர் ராஜேந்திர பிரசாத் ஏன் கவலைப்பட வேண்டும். வருங்கால அரசியல யதேச்சாதிகார அரசியலாக

இந்தோனேஷிய ஐக்கிய நாடுகள்

அதிகாரமேற்கொள்ள ஏற்பாடுகள்

பெடரல்கட்சி, குடியரசு கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த இந்தோனேஷியத் தலைவர்கள் டிசம்பர் இறுதியில் அதிகாரத்தை மேற்கும் வகையில் ஏற்பாடுகளைத் துரிதமாய் மேற்கொண்டிருக்கின்றனர். சுதந்திர இந்தோனேஷிய ஐக்கிய நாடுகள் சார்பில் ஆதிபத்திய அதிகாரத்தை மேற்கொள்வதற்கான வழி வகைகள் வகுக்க நவ. 26-ந் தேதியன்று தேசிய கமிட்டியொன்று நிருவப் பெற்றுள்ளது.

அந்த ஒரு குரல்!

'புதிய அரசியலை நிறைவேற்றுவிடலாம்' என்று கூறி, நவம்பர் 26-ந் தேதியன்று அரசியலமைப்பு சபைத் தலைவர், அதனை 'ஓட்டு'க்கு விட்டதில், 'நிறைவேறட்டும்' என்ற பெருவாரி உறுப்பினர்களின் பேரொலியினூடே "வேண்டாம்" என்ற பெருங்குரல் ஒன்று எழுந்தது. அரசியலின் மீது அதிருப்தி கொண்டு அப்பெருங் குரலினைப் பாய்ச்சியவர் மௌலானா ஹஸ்ரத் மோஹானி ஆவர். இவர் ஆரம்பமுதற் கொண்டே 'சோவியத் யூனியனுக்குள்ளதைபோன்றதொரு அரசியல் இங்கும் வேண்டு'மென்று குறிப்பிட்டு வந்திருக்கிறார்.

காமன்வெல்த் மாநாடு

காமன்வெல்த் அயல்நாட்டு மந்திரிகள் மாநாடு, அடுத்த ஆண்டு ஜனவரி 9-ல் கொழும்பில் ஆரம்பமாகும். பிரிட்டிஷ் தூதுக்குழுவுக்குத் தோழர்கள் பெவின், நோவல் பேக்கர் தலைமைதாங்கிவருவாராம்.

இருக்கப்போவது உறுதி. இது நாடறிந்த உண்மை,

அப்படிப்பட்ட அரசியலுக்குக் கட்டாயம் கைதூக்கும் ஆட்களே தேவைப்படும் அந்த அரும்பணியாற்ற இப்போதிருக்கும் யோக்கிதாம்சமே போதுமே!

அடுத்தபடியாக சுதந்திர பாரதத்தின் அரசியல் இந்திய பாஷையில் இல்லையேயென்று ஏக்கப்படுகிறார் தோழர் ராஜேந்திர பிரசாத் அவர்! இதற்கென்ன செய்வது? இந்தியா என்ற ஒருநாடு இருந்தாலல்லவோ இந்திய பாஷை யென்று ஒன்று பொதுவாக அமைய முடியும். இது ஒரு உபகண்டம் இதனை ஒரே ஆட்சியின் கீழ் வைத்திருக்க உதவியது ஆங்கில மொழி எனவேதான் ஆட்சியாளர்! அந்த மொழியின் உதவியைநாடியுள்ளனர் போலும்!

ஆகஸ்டுப் புரட்சியா, ஆகஸ்டுப் பூசலா?

அன்று துரோகிகள், இன்று துணைவர்களா?

கண்மூடித்தனத்தைக் கண்டிப்பது நாஸ்திகமா?

தடை விதிக்குமுன் தக்க காரணம் காட்டவேண்டாமா?

அறிவைத் துணைக் கொள்; அடக்குமுறை வீசாதே!

சென்னை புதுப்பேட்டை தி. மு. கழகத் துவக்க விழாவில், தோழர் இரா. நெடுஞ்செழியன் முழக்கம்

சென்னை, நவ. 25—

சென்னை புதுப்பேட்டை நகர உட்கிளை திராவிட முன்னேற்றக்கழகத்தின் துவக்க விழாக் கூட்டம் 23-11-49 புதன்கிழமையன்று மாலை, புதுப்பேட்டை வேலாயுத ஆச்சாரி தெருவில் நடைபெற்றது.

கூட்டம் சரியாக மாலை 6-30 மணிக்குத் துவக்கப்பட்டது. நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டிருந்தபடி தலைவர் தம் முன்னுரைச் சொற்பொழிவாற்றினார்.

பின்னர், தோழியர் சத்தியவாணி முத்து அவர்கள், இன்றைய ஆட்சியின் போக்கு பற்றியும், தி. மு. க. திட்டங்கள் பற்றியும், தி.மு.க. கொடியின் இலட்சியம் பற்றியும் விரிவாக எடுத்துக்கூறி கொடியினை உயர்த்தி வைத்தார்கள்.

அடுத்துத் தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள், இன்றைய ஆளவந்தார்களின் பாசிச போக்கைக்கண்டித்து, தி. மு. கழகத்தின் நோக்கத்தை விரிவாகக் கூறி கழகத்தைத்திறந்து வைத்தார்.

இரா நெடுஞ்செழியன்

பின்பு, தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு;—

"இங்கு நம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கூடியிருப்பது யாவரும் அறிந்ததே. அதன் தோற்றத்திற்கான காரணத்தை விரிவுபடுத்தத் தேவையில்லை, ஏற்கனவே ஏட்டிலும் நாட்டின் பல பாகங்களிலும் எழுதியும் பேசியும் உள்ள காரணத்தால்.

கள்ளமோ, கபடமோ, சூதோ, சூழ்ச்சியோ, சிறுமதியோ அறியாத இளமை பொருந்திய நாங்கள் திராவிடர் கழகத்தைவிட்டு வெளியேறி வேறு கழகம் அமைத்து இலட்சியத்தோடு — ஆனால் வேறு அமைப்பு முறையோடு அமைத்துக்கொண்டுள்ளோம். அந்த இளமை பொருந்திய அத்துணை தோழர்களும் இங்கு இருப்பதைக் கண்டு, மகிழ்கிறேன். மனமார வரவேற்கிறேன்.

முன்னேற்றக் கழகம் முன் வந்தது ஏன்?

கழகத்தின் கொள்கை அது உங்கள் முன் முழங்குவதன் நோக்கம், அரசியல் சமுதாயம்-பொருளியல் ஆகிய மூன்றிலுள்ள, இழிவை அகற்றத்தான் அதாவது; அரசியலிலே உள்ள பாசிசத்தையும், பொருளாதாரத்திலுள்ள முதலாளித்வத்தையும், சமுதாயத்திலேஉள்ள பேதத்தையும் அகற்றி அரசியலிலே தனிநாடு காண்பது, பொருளாதாரத்திலே சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதி கணுவது, சமுதாயத்திலே மனிதனை மனிதனை நினைக்கும் மனிதனின் உரிமை பெறுவது ஆகியவற்றுக்காகப் பாடுபடவே திராவிட முன்னேற்றக் கழகம் முனைந்துவந்துள்ளது.

எப்படி முடியும்?

இந்தியா ஒரே நாடல்ல, துணைக்கண்டம் என்று நாம் பன்முறை அகில உலகையும் சுட்டிக் காட்டி, சரித்திர வரலாற்றைக் காட்டி, இலக்கியம், பண்பு, பழக்க வழக்கம், கொள்கை—கோட்பாடு, கலை நாகரிகம், நிறம் நிலைமை, உடை, உணவு ஆகியவைகளைச் சான்றாக வைத்துத்தான், நாம் நம் நாடடைப் பெற, "திராவிடநாடு திராவிடருக்கே" என்றோம். மறுத்தாரில்லை எவரும், வாதத்தின்மூலம்! மாறாக, கேலியும், கிண்டலும் செய்தனர். எப்படி ஒரே நாடாகும் இந்தியா? தூத்துக்குடியிலிருந்து கிளம்பி அகில இந்தியாவையும் சுற்றிக்கொண்டு மீண்டும் தூத்துக்குடிக்கு வந்தால், உணவிலே ஒன்றாக உளதா? உடையிலாவது ஒருமையுண்டா? மொழியிலே ஒருமையுண்டா? பழக்கவழக்கங்களிலே ஒரே பண்பு உண்டா? இப்படியெல்லாம் இருக்க இந்தத்துணைக்கண்டம் எப்படி ஒரு நாடாக முடியும்? ஐரோப்பா ஒரே மொழி-ஒரே கிருத்துவ மதம்—ஒரே கடவுள், ஒரே உணவு, உடை, பண்பு, பழக்க வழக்கம் கொண்டிருந்தும், அது 32 நாடுகளாகப் பிரிந்து இருக்கின்றது. அவை ஒவ்வொன்றும் தனக்கென ஒரு பாராளுமன்றமும், பாதுகாப்புப் படையும் அமைத்துத் தனித்து வாழுகிறதென்றால் ஏன் இங்கு இந்தியாவில், எண்ணற்ற சாதிகளும், மக்கட் பிரிவும், மதங்களும், கடவுள்களும் வாழுமிடத்தில் வர்க்கத்திற்கொரு வட்டாரம் அமையக்கூடாது?

திரித்துக் கூறுவதன் நோககம்

காமராஜரும், அவரின் அமைச்சர்களும் அடிக்கடி நம்மைப் பற்றி இழித்தும், பழித்தும், திரித்தியும் கூறுகிறார்கள். அமைச்சரின் இலக்கணமறியா அமைச்சர்கள் இகழ்வதன் நோக்கமென்ன? அவர்களிடத்தே பணபலமும், பத்திரிகை பலமும் இருப்பதால் தான்! அவர்களுக்கு, அன்றாடப் பத்திரிகைகள் அகில இந்தியாவிலும் 100-க்கு மேல்! மாதப் பத்திரிகைகள் 500-க்கு மேல்! 2000-க்கு மேற்பட்ட வாரத் தாள்கள்! ஏன் கூற மாட்டார்கள் திருத்தி?

உள்ளதை உரைக்கிறோம்

நமக்குத்தினசரிப்பத்திரிகை 'மாலைமணி' ஒன்று. அதுவும் சிறிய அளவு; செய்தி தராதது. நமக்கும் பணபலமும் பத்திரிகைபலமும் இருந்தால், இந்நாட்டு மக்களை உண்மையை உணரச் செய்துவிலாம் எளிதில். காரணம், நம்மிடத்தே பொறாமையோ, பொச்சரிப்போ, வஞ்சகமோ, வஞ்சபுத்தியோ கிடையாது. நீதியின் பேரிலும் நியாயத்தின் பேரிலும், பகுத்தறிவைத் துணை கொண்டும் இயற்கைக்கு ஒட்டியதாயும், இன்பம் தருவதாயும் ஆனகருத்துக்களைக் கூறுகிறோம் திரித்தோ—மறைத்தோ நாம் கூறவேண்டியதில்லை, அவசியமில்லை. அது அநாகரிகம் என்று கருதுகிறோம். ஆகவேதான் தி. மு. க. கூட்டத்திற்கு மக்கள் திரளாக வருகின்றனர்.

யார் துரோகிகள்?

எதை மறந்தாலும் மறப்பார் காமராஜர்நம்மைப் பற்றி இவர்கள்வெள்ளையன் ஆட்சிக்குத் தூபமிட்டவர்கள், தாசர்கள் துரோகிகள்' என்பதைமட்டும் சொல்ல மறக்கமாட்டார். அவருக்கு மனப்பாடமல்லவா அது? நாங்கள் துரோகிகள், தூபமிட்டவர்கள் என்பதற்கு ஏதாவதொரு சான்று காட்ட முடியுமா? நீ மௌண்ட் பேட்டனோடு கை குலுக்கினாய். எங்கள் கரங்கள் அவர்களைத் தொட்டறியாதே! அவர்கள் இந்நாட்டைவிட்டு அகலும்போது, போகின்ற விமானம் மறைகின்ற வரையில், வழிமேல் விழி வைத்துக் கண்ணீர் கசிந்தாய் பிரிவாற்றாமையால்! வெள்ளையனோடு பழக, பேச - கை குலுக்க உங்களுக்கு இருந்த அளவிலே, எங்கள் இயக்கத்தைச்சேர்ந்த எவருக்கும் ஒரு சிறு அளவுகூட இருந்ததில்லையே! அப்படியிருக்க எங்களைப் பார்த்து வெள்ளைக்காரர்க்குத் தாசர்கள் துரோகிகள்என்கிறாய்? எவ்வளவு மனமார்ந்த பொய் புகல்கிறாய்? யார் துரோகிகள்?

நீ செய்த ஆகஸ்டு தியாகத்திலே, பச்சிளங்குழந்தைகளையும், பல நல்லோரையும், தாய்மாரையும், கள்ளமற்ற உள்ளம் உடையோரையும் ஏற்றிச் செல்லுகின்ற இரயிலைக் கவிழ்க்க, தண்டவாளத்தைப் பெயர்க்க, நாங்கள் முன் வரவில்லையே, ஆகவே, நாங்கள் துரோகிகள்? மூட்டாள்படையின் முன்னணிவீரனாக இருந்து தந்திக்கம்பிகளை அறுத்து, அஞ்சல் அலுவலகங்களையும் கொளுத்தி, பிறகு பொது மக்கள் வரிப்பணத்தை அவைகளுக்குச் செலவிட்டு, நஷ்டத்தை ஈடு செய்ய மக்கள் துன்பம் படக் காரணமாயிருந்த நீ செய்த அந்த 'ஆகஸ்' தியாகத்தை நாங்கள் செய்யவில்லையே, ஆகவே துரோகிகளா?

ஜஸ்டிஸ் கட்சியும், காங்கிரசும்.

வெள்ளையன் இங்கே கொள்ளையடிக்க வழி செய்கின்றவர்கள் இந்த ஜஸ்டிஸ் கட்சி மந்திரியினர் என்றனர் இவர்கள். அவர்கள் ஆட்சியிலே, ஒரு மந்திரியாவது இலஞ்சம் வாங்கினார் என்று இவர்களாலே விரல் விட்டுக்காட்ட முடியுமா? அவர்கள்-நீதிக்கும் நேர்மைக்கும் கட்டுப்பட்டார்கள் கடமையைச்செய்தார்கள் பத்திரிகைகளிலேகூட வந்ததில்லை, அவர்கள் இலஞ்சம் வாங்குகிறார்களா என்று சந்தேகமும் பட்டதில்லை. ஆனால் இவர்கள் ஆட்சியில், காங்கிரஸ் தலைவர்களே கூறுகிறார்கள், இப்படிக் காங்கிரஸ்காரர்கள் இலஞ்சம் வாங்குவது அழகலல வென்று! பிரகாசமும் ஏதேதோ செய்தார், விசாரணை நடந்தது. ஒன்றுமில்லாமல் செய்தி மறைக்கப்பட்டுவிட்டது.

ஐஸ்டிஸ் கட்சியினர் ஆட்சியிலே, அன்பும், நேர்மையும், ஆளத் திறமையும் இருந்தது. இந்தச் சுயராஜ்ய புருடர்கள், இப்பொழுது தான் இவர்கள் ஆளக்கற்றுக்கொள்கிறார்கள்? மந்திரி சபை இருப்பதோ ஓராண்டு! ஒரு ஆண்டில் கற்றுத்தேர்ந்து எப்படி ஆட்சி புரிவரோ அறியக்கூடவில்லை!

புரட்சியா? பூசலா?

காமராஜர் கடும்போர் செய்து சிறையிலே இருந்த நேரத்திலோ, ஐந்து லக்கர் தியாகிகள் ஆங்காங்கேபுரட்சி செய்த காரணத்தினாலோ, காங்கிரசிடம் அவனுக்கிருந்த அச்சத்தினாலோ அல்ல அவன் இந்நாட்டை விட்டுச் சென்றது. புரட்சிப் புயலைத் தாங்க முடியாத காரணத்தினாலும் அல்ல, தானே விட்டுச்செல்ல வேண்டிய நிலை அவனுக்கு ஏற்பட்டதே. அவனேபார்த்து இந்தா இந்தியா என்று கொடுத்தது எப்படி (ரெவிலயூஷன்) புரட்சி நடத்திப் பெற்ற சுயராஜ்யம் ஆகும்? ஆகஸ்டு புரட்சியாம்! அதற்குப் பெயர் புரட்சியா? பூசலா? அது வெறும் பூசல் என்று தான் அறிவுடையோர் கூறுவர்!

அறிவுப் பஞ்சம்!

அன்று ஆகஸ்டு துரோகி என்று அழைக்கப்பட்ட தோழர் இராஜகோபாலாச்சாரியை, இன்று கவர்னர் ஜெனரலாக ஏற்றுக்கொண்டாய், ஏற்கலாமா? அந்நியன் ஆட்சியில் அமோகப் பற்றுக்கொண்டு, அதிலேயே உழன்ற அன்பர் கோபால்சாமிஐயங்காரை எப்படி அமைச்சராக ஏற்றுக் கொண்டாய்? இன்னும் கூறவேண்டுமானால், டாக்டர் அம்பேத்கார் போன்று காங்கிரசின் இழிவுகளை, காந்தியாரின் போக்கும் காங்கிரசும் என்று எழுதி பேசி, இவர்கள் ஆபாசத்தை எடுத்துக்காட்டி, காங்கிரஸ் அன்று மோசடி செய்த 1½-கோடி ரூபாயின் விளக்கத்தையும், சேவியாசவும், கிண்டலாகவும் தான் தீட்டிய "காந்தியாரும் காங்கிரசும் தாழ்த்தப்பட்டோருக்குச் சாதித்ததென்ன?" என்ற புத்தகத்திலே எழுதிய அவரை, நீ எப்படி மன்றம் ஏற்றியிருக்கிறாய்? நீ அன்று துரோகி என்றோரை இன்று நீயே துணைக்கழைக்கிறாய் என்றால், என்ன அர்த்தம்! அந்த அளவுக்கு அறிவுப் பஞ்சம் உனக்கு என்பதுதானே? உன் வீம்பு, வீராப்பு என்ன ஆயிற்று?

கேட்டதுண்டா?

மந்திரிகளுக்குச் சாதாரணமாக ஓய்வு இருக்காது, இருக்க முடியாது. ஏனென்றால், அவர்கள் நாட்டின் பாதுகாவலர்கள் வந்துகுவிகின்ற விண்ணப்பங்கள், குறைகள், தேவைகள் எண்ணிலடங்கா. வருகின்ற மடங்களைக் கிழித்துப் படிக்கவே நேரமிருக்காது. அலுவலகத்திலேயே ஓய்வு இருக்காது என்றால் சுற்றுப் பிரயாணம் செய்ய முடியுமா? ஆனால் நமது மந்திரிகளுக்கு அப்படியில்லை. சென்ற ஐந்து மாத காலத்திலே இவர்கள் செய்தசுற்றுப்பிரயாணத்தைப் பாருங்கள்! மொத்த நாள்—153 இதில் மாதவமேனன் சென்னையில் இருந்தநாள் 86 வெளியூர் 67!

எவ்வளவு வெட்கக்கேடான—வேதனை தரும் நிலை மேலைநாடான இங்கிலாந்திலோ, அமெரிக்காவிலோ, எந்த நாட்டிலோ, தற்போது மந்திரிகளாயுள்ள அட்லியோ, ட்ரூமனோ, அக்கிசனோ இப்படி பாதி நாட்களில் சுற்றுப்பிரயாணம் செய்ததாகக் கேட்டதாவதுண்டா?

என்னதான் செய்வது?

"சிலர், விஷமப் பிரசாரத்திற்காக, வீணாக எங்களைக் குறைகூறுகிறார்கள். நாங்கள் சுற்றுப் பயணம் செய்வது தவறாம். காங்கிரஸ் கட்சிக்கு மந்திரி பிரசாரம் செய்வது கேடாம். ஒரு மந்திரி வேறு என்னதானசெய்வது?" என்று ஒரு பொறுப்புள்ள மந்திரிபக்தவத்சலனார் மக்களைப் பார்த்துக் கேட்கிறார், இப்படி, ஏதாவது சிந்தனைத் தேர்வே—சிந்திக்கின்ற தன்மையோ இவர்களிடத்திலே ஒரு கடுகளவாவது இருக்கின்றதா? மந்திரி பக்தவத்சலனாருக்குக் கொடுத்திருக்கிற பதவி சாதாரணமானது அல்ல. மராமத்து இலாகாக மந்திரி! நாட்டிலே, பாயாத இடத்திலே நீர் பாய்ச்சவசதி, பாலம் அமைத்தல்—பாதை புதுப்பித்தல், மின்சார உற்பத்தி சய்சல் இன்னபிற முக்கிய வேலைகள் அவருக்கு உண்டு. ஆனால், அவைகளையெல்லம் விட்டு விட்டு பொறுப்பையும் தெரிந்து கொள்ளாது நம்மைப் பார்த்து

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

சிந்தையும் செயலும் சரிப்பட்டு வரவில்லையே!

வேலையும் நேரமும் வீணுகின்றன

கட்டியாள முடியவில்லையே என்ற கலக்கம்

ரூர்க்கி எஞ்சினீரிங் கல்லூரி விழாவில் பண்டித நேருவின் ஒப்பாரி!

"பல்வேறுபட்ட குதிகளுக்கிடையேயும் மாகாணங்களுக்கும், மாகாணங்களுக்கும் மத்திய சர்க்காருக்குமிடையேயும், பல்வேறு இலாகாக்களுக்கிடையேயும் சிந்தனையிலோ, கருத்திலோ ஒருமுகப்பாடில்லை. சிலமாகாணங்கள் தங்களைத் தனி சுதந்திரநாடாசமதித்து நடக்கின்றன. பூரா இந்தியாவையும் ஒரே உறுப்பாகக் கருதி ஒருமுகமான அபிவிருத்திக்கு வழி காணவில்லை. இதன விளைவாசத் திட்டங்களில் மோதுதலும், அதையொட்டி வேலை, நேரம், சக்தி முதலியன விரையமாவதைக் காண்கிறோம்."

என்று பண்டிதர் ரூர்க்கியிலுள்ள சன் எஞ்சினீரிங் கல்லூரி நூற்றாண்டு விழாவில்பேசியபோது குறிப்பிட்டிருக்கிறர்.

பண்டிதரின் இந்தப் பேச்சு இவ்விந்திய உபகண்டத்தின் இன்றைய நிலையைப் படம்பிடித்துக்காட்டுவதாக இருக்கிறது. இந்தியா முழுவதிலும் அரசியலில் ஒரேவித சிந்தனை, கருத்து, செயல் [illegible] அமைவில்லையே என்று உளம் நொந்து பேசுகிருர் பண்டிதர். பண்டிதர் இக்கனம் நாட்டின் நிலைகண்டு [illegible] கலங்குவதைக்கண்டு அவர்பால் நாம் பரிதாபம் கொள்ளுகிறோம். பாவம்! பண்டிதர் இவ்விந்திய உபகண்டத்தை ஒரே நாடு என்று நினைத்துக்கொண்டு, அந்த நினைப்பை அடிப்படையாகக் கொண்டு அனைத்தையும் அளவிட்டுப்பார்க்கிருர். ஆனல், நமது அனுபவம், இந்தியா ஒரு நாடல்ல, பல வேறுபட்ட இனங்களைக்கொண்ட ஒரு உபகண்டம், இத்தகைய உபகண்டத்தில் அரசியலிலோ, சமுதாயத்திலோ, பொருளாதாரத்திலோ ஒன்றுபட்ட தன்மையைக் காணமுடியாது. [illegible] மூடக்கருத்து, வீழ்வதற்கு [illegible] போன்ற பயனற்ற வேலை என்பதை அவருக்கு அறிவுறுத்துகிறது. இக்காலம் இயற்கை நிலை இதை [illegible] அவர் உள்ளம் [illegible] பேசுவதில் ஆச்சரியமில்லை.

"சில மாகாணங்கள் தங்களைத் தனி சுதந்திர நாடாகவே மதித்து நடக்கின்றன" என்று வெளிப்படையாகச் சொல்கிருர் அவர். இதிலிருந்து நாம் மாத்திரமே நாட்டுப் பிரிவினையை வற்புறுத்துகிறோம் என்ற கருத்து எண்ணத்தில் அடிப்பட்டுப் போகிறது. நாம் நாட்டுப் பிரிவினைப்பற்றி வற்புறுத்திப் பேசுவது, [illegible]றுவது என்ற அளவோடு நிற்கிறோம். ஆனல் வேறு சில மாகாணங்கள், நம்மைப்போல் பேசாவிட்டாலும் எழுதாவிட்டாலும் நடத்திக் காட்டுகின்றன என்பது பண்டிதர் பேச்சிலிருந்து புலனாகிறது.

எனவே, பண்டிதருக்கு நாம் ஒன்று கூறுகிறோம். அதாவது, பண்டிதர் எதிர்பார்ப்பதுபோல் இந்தியா எல்லாத் துறைகளிலும் ஒருமைப்பட்டு வாழ்வது என்பது நடைமுறைக்கு ஒவ்வாதது. இந்தியா ஒரே நாடாக, ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ், அதுவும் அவர்களுடைய ஆட்சி முறையின் வசதிக்காக இருந்து வந்ததைத் தவிர வேறு என்றும் இருந்ததில்லை, இனி இருக்கப் போவதுமில்லை. இது வெறுரையல்ல; நாட்டு வரலாறு கற்பிக்கும் பாடம்.

சில மாகாணங்கள் தம்மைச் சுதந்திர நாடாக மதித்து நடக்கின்றன என்று கூறும் பண்டிதருக்குக் கூறுகிறோம், உண்மையிலேயே இத்திராவிட நாட்டைப்பொறுத்த வரையில் நாங்கள் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆட்சியாளர் வேண்டுமானல் மத்திய ஆட்சிக்கும் மாகாணஆட்சிக்கும் கட்டாய பணம் செய்விக்க முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனரே தவிர, இம்மாகாண மக்களின் மனம், சிறப்பாகத்தமிழ் மக்களின் மனம் மத்திய ஆட்சியிடம் பற்றுக் கொள்ளவில்லை. இதற்குக்காரணம், மத்திய ஆட்சியின் கீழிருந்து அரசியல், பொருளாதார, சமுதாயச் சுதந்திரங்களைத் தாங்கள் பெற இயலாது என்பதைத் திடமாக நம்புவதும், அந்த நம்பிக்கைக்கு ஆக்கமளிக்கும்முறையில் ஆட்சியாளர் நடந்துகொள்ளுவதுமேயாகும்.

எனவே, இந்தியாவை ஒரே ஆட்சியின்கீழ் கொண்டுவர என்ன செய்தாலும், எப்பாடுபட்டாலும் கோரியபலன் கிடைக்காது. நாட்டின் இயற்கை நிலையுணர்ந்து, வகுத்துக்கொள் [illegible]டாரம் அமைத்தாலன்றி இந்திய உபகண்டம் நலம்பெற வழியில்லை. பண்டிதர் இந்த உண்மையை உணருவாரா?

ஒரு மசோதாவுக்கு ஒன்பதாயிரம் ரூபாய்!

பணம் பாழாகும் விதம்!

"மாகாணங்களின் பெயர்களை மாற்ற கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரம் அளிக்கும் மசோதாவை விவாதித்து நிறைவேற்ற ரூ 9000 செலவாயிருக்கிறது" என்று பீஹாரைச் சேர்ந்த தோழர் தாஜ்மல் ஹூசேன் அ. ஸ. சபையில் 25-ந் தேதி கூறினர்.

"அ. ஸ. சபையில் ஒவ்வொரு மணி நேர விவாதத்திற்கும் ரூ 6000 செலவாகிறது. 1-30 மணி விவாதம் நடந்ததினல் ரூ 9000 செலவாயிருக்கிறது. இது அவசியமல்ல என்று கருதுகிறேன் ஏனெனில் 1950 ஜனவரி 26-ல் இந்திய அரசியல் சட்டம் முழுதுமே மாற்றப்பட இருக்கிறது. இன்னும் இரண்டு மாதம் காத்திருக்கலாம்" என்று மேலும் அவர் கூறினர்.

யு. எஸ். மக்கள் தொகை

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் (யு. எஸ்.) மக்கள் தொகை அக்டோபர் 1-ந் தேதியோடு 149,947,000 என்றும், இப்போது 15 கோடியே ஆகியிருக்குமென்றும் மதிப்பிடப்படுகிறது. கடல் கடந்த இராணுவ சர்வீஸ்களிலுள்ள 487 000 வீரரும் இக்கணக்கில் அடங்கிவிடுகின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

29—11—49

ஒரகாட்பேட்டை :— இரா. நெடுஞ்செழியன், காஞ்சி மணிமொழியார், எம். சின்னையா.

தீமிரி :— சி. பி. சிற்றரசு. ஆ. மணிஎழிலன்.

30—11—49

பண்ணுருட்டி :— க. அன்பழகன் (திருமணம்)

மதுராந்தகம் :— காஞ்சி மணிமொழியார், எர். சின்னையா, இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன்.

ஆகஸ்டுப் புரட்சியா ...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

துக் கேட்கிறர் "என்னதான் செய்வது? கட்சிப்பிரசாரத்தைவிட, காங்கிரசை நிலைக்கச் செய்வதைவிட வேறு வேலை என்ன செய்வது என்று" மராமத்து என்றல் என்ன என்பதை முதலில் பாடங் கற்றுக் கொள்ளட்டும்.

ஆண்டவனுக்கு அடுக்காதா?

பாலில்லாமல், பசியால் மடிந்த குழந்தைகள் எண்ணிக்கை ஏராளம் என்று, சுகாதார இலாகா அறிவித்துள்ளது. இதே நேரத்திலே, மக்கள் பக்தியின் பேராலே, பழமையின் பேராலே பழநியாண்டவன் தலைமீது கொட்டுகின்ற பால், மலையெல்லாம் பாய்ந்து, படி வழியாக ஓடி, சாக்கடையிலே சென்று விழுகிறதே இது அவசியமா? அறிவுடைமையா? அப்படிகொட்டுகின்றாலே, உயிரற்ற சிலையின் மீது ஊற்றுதே, உயிருள்ள சிலைகளுக்கொடு என்கிறோம்கொடுத்தால் அது ஆண்டவனுக்கு அடுக்காதா? பழநியப்பன் என்ன அதைக்கண்டு உன்மீது படையெடுப்பா செய்வான்? உன் உழைப்பையும், நேரத்தையும், பொருளையும் இப்படிக் கண் மூடித்தனத்தாலே, சரியாக்கவேண்டும் என்று சொன்னல், நாங்கள் நாஸ்திகர்கள்?

$3\frac{1}{2}$ இலட்சம் ரூபாயில் சென்ற மூன்று மாதகாலத்துக்கு முன்னே, காஞ்சியிலே ஒரு வெள்ளித்தேர் செய்யப்பட்டது, ஒரே நாள் இரவு உற்சவத்திற்காக! இதே நேரத்திலே, எண்ணற்ற மக்கள் எழுதவும், பேசவும் தெரியாமல், மடமையில் ஆழ்ந்து மரமண்டையர்களாக, பகுத்தறிவு அற்று இருக்கிறர்களே, அவர்கள் வாழ்வு செம்மையுற, கல்விச்சாலைகளையும், கல்லூரிகளையும் கட்டுங்கள் மருத்துவ விடுதிகளையும் துவக்குங்கள் விழலுக்கு நீர்ப்பாய்ச்சி வீணுகாதே என்றல், நல்ல வழியில் பொருளை, உழைப்பை, செலவிட்டால் ஆண்டவனுக்கு அடுக்காதா?

என்ன தவறு கண்டீர்கள்?

இப்படிப் பேசி மக்களிடை மறுமலர்ச்சியை உண்டாக்குகிருர்களே, ஆகவே போடு தடை. போ உள்ளே! ஏறு கண்டால்! எழுதாதே! படிக்காதே! என்று அரசாங்கம் தன் அடக்குமுறை அம்புகளை எடுத்து வீச அரம்பித்தது ஏன் எங்கள் புத்தகங்களுக்கு - நாடகங்களுக்குத் தடை? என்ன குற்றம் கண்டீர் இராவண காவியத்திலே, இரணியன் அல்லது இணையற்ற வீரனிலே? ஒரு வரி காட்ட முடியுமா? மூன்று வீற்றிருக்கும் அத்தனையும் மந்திரிகளையும் கேட்கிறேன், தடை செய்திகளே என்ன தவறு கண்டீர்கள்? உள்ளபடியே கூறுங்கள், அப்புத்தகங்களைப் படித்ததுண்டா! பார்த்ததுண்டா? இப்படிச் சூத்திரக் கயிற்றிலே சிக்கிய பம்பரமாகச் சுழலுவது ஒரு அறிவுடைய அரசாங்க மந்திரிகளுக்கு அழகா? கல்கியும் ஆனந்த விகடனும் கம்பர் காவியனை, கம்பனைப் பற்றி, இராமாயணத்தைப் பற்றி, இராவணனை இரக்கமற்ற அரக்கனாக ஆக்கி, இராமனை ஈடற்ற இறைவனாக்கிப் பிரசாரம் செய்யும்போது, நீ ஏன் எங்களைக் கண்டு சீறுகிருய்? சிறுமதியைத்தானே காட்டுகிறது அது! தைரியமிருந்தால் வா, நீ சம்பூரண ராமாயணம் நாடகம் நடத்து. மறுநாள் நாங்கள், நீதிதேவன் மயக்கம் நாடகம் நடத்துகிறோம். இதுதானே அறிவுடைமை, நேர்மை, திறமை. அதைவிட்டு அடக்குமுறை அம்மை வீசுகிருயே! எத்தனை நாளைக்கு நீடிக்கும் என்று நினைக்கிருய்கொலை, கொள்ளை, பலாத்காரத்தை நாங்கள் தூண்டினல், தடு, அடி. ஆனல், அமைதியானமுறையிலே அறிவுப் பிரசாரத்தை செய்யும் எங்களை அடக்குவது அழகு தானென்று ஆளவந்தார்களைக் கேட்கிறேன.

வாழ்க்கையைப்பற்றி அல்ல வளையலைப்பற்றி!

நாட்டிலே படித்தவர்கள், திறமையுடையவர்கள், வேலையற்று வேதனைபடும் காட்சியைப்பற்றியும், தொழிலாளர்கள் உழைத்தும், உழைப்புக்கேற்ற கூலி கிடைக்காமல், ஒடிந்த உள்ளத்தைச் சுமந்து கொண்டுநடமாடுகின்ற காட்சி. அதிலே மாற்றம் காண வேண்டிய அவசியம், வறுமை, பிணி, வசதியற்ற நிலைமற்ற சொல்ல முடியாத தொல்லையிலே, சிக்கி சிதைகின்ற மக்களைப்பற்றி அல்ல, சட்ட சபையில் பேசப் படுவது வளையலை யாருக்குப் போடுவது! யாருக்குத்தேவை. அழகு! என்பதைப் பற்றி பேசப் படுகிறது. எவ்வளவு பயங்கரமான நிலையிலே இந்நாடு இருக்கிறது என்பதை எண்ணிப் பாருங்கள். ஒரு நாட்டின் அறிஞர்கள் கூடுகின்ற அவை—அவசியத்தை நிறைவேற்றுகின்ற --திட்டம் தீட்டுகின்ற அவைதன் சட்டசபைஅதிலே பேசப்படுகின்ற பேச்சு மந்திரிக்கு வளையல் போடலாமா, மக்களுக்கே 'வளையல்' போடலாமா என்பதைப்பற்றி வெட்கபடவேண்டிய செய்தி வேதனை தரும் நிகழ்ச்சி அன்றோஆகவே இதுபோன்ற பயனற்ற தனத்தையும், கண் மூடித்தனத்தையும் நீக்கி, திராவிடத்திலே பொருளியல், அரசியல் சமுதாயம் ஆகிய யாவற்றிலும் மாற்றம் காண, விழ்ச்சியுற்ற தமிழகம் எழுச்சியிற புரட்சி செய்கிறோம், புது உலகம் காண விழைகிறோம். அது அறப்புரட்சியிலே பூக்கின்ற புத்துலகம். ஆகவே, அனைவரின் ஒத்துழைப்பு அவசியம். எல்லோரும் எங்களுடன் சேர்ந்து பணியாற்ற வாருங்கள். சேருங்கள்." (ந. நி.)

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களிலும், அனுப்பும் மணியார்டர்களிலும் தங்கள் சந்தா எண்ணைக் குறித்து எழுதும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறர்கள். சந்தா எண் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டாது, என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மானேஜர் : மாலைமணி.

பாசீசத்தையும், பழைமையையும் அழிப்போம்

திராவிடத்தின் புகழ் திக்கெட்டும் பரப்புவோம்

—(0)—

முன்னேற்றம் காண அனைவரும் வாரீர்!

குமரமங்கலத்தில் தோழர்கள் சொற்பொழிவு

குமரமங்கலம், நவ. 22—

20—11—49 ஞாயிறு காலை 9-30 மணிக்கு இவ்வூர் தி. மு. கழகத்தினரும், கோபித் தோழர் ஜி. என். ராசு அவர்களும் மற்றும்பல இயக்க நண்பர்களும் நமது இயக்கக் கொடிகளுடன் ஊர்வலமாய்புறப்பட்டு 10-மணிக்குகழகக் கட்டிடத்திற்கு வந்தடைந்தனர். வீதிகள் நெடுகத் தோரணங்களும் இயக்க லட்சியக் குறிப்புகள் பொறித்த தட்டிகள் வழிநெடுக தொங்கவிடப்பட்டிருந்தன. கூட்டத்தினர் கழகக் கட்டிடம் வந்து சேர்ந்தவுடன், தோழர் ப. அங்கசாமி அவர்களின் தலைமையில் கூட்ட நிகழ்ச்சி ஆரம்பமாயிற்று. முதலில் கூட்டத்தினரை வரவேற்று, தோழர் ப. முனியப்பன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

திராவிடர் கழகத்தில் இதுவரை பணியாற்றிவந்த நாங்கள் தற்சமயம் தி. மு. கழகத்தில் வேலைசெய்யவேண்டிய அவசியம் கழகத் தலைவர் பெரியார் நடந்துகொண்ட முறையும், அதனால் கழகத்தில் தொண்டுசெய்த நாங்கள் அடைந்த இகைப்பும்தான் இந்த சூழ்நிலையை வைத்துக்கொண்டு பழமையும் பாசிசமும் நாட்டில் நடமாட ஆரம்பித்ததும், அரசியலாரும் இதுவே சமயமென்று கட்சிக் கூட்டங்களுக்கு 144 போன்ற தடையுத்தரவுகள் கழகத்தாரால் எழுதப்பட்ட புத்தகங்கள் பறிமுதல்; நாடகங்களுக்குத் தடைவிதித்தல்; பத்திரிகைகளுக்கு ஜாமீன்; ஜாமீன் பறிமுதல்; 153 செக்ஷன் பிரயோகம் போன்ற அடக்குமுறைகளை ஏவி, திராவிட இயக்கத்தையே நசுக்கிவிடத்திட்டமிட்டு வேலைசெய்வதைக் கண்டு சகிக்காத நாங்கள் தி. மு. கழகம் காணவேண்டியதாயிற்று. இனி தி. மு. கழகமும் தி. கழகமும் எதிரிகளுக்கும் நாட்டிலே படையெடுத்த பழமைக்கும் பாசிசத்திற்கும் இரட்டைக் குழல் துப்பாக்கி போன்று வேலைசெய்து ஷை நாசகாரர்களை நிச்சயம் வீழ்த்தும். இனி தி. மு. கழகம் ஒன்றுதான் நாட்டிற்கேற்பட்ட நலிவு போக்க நல்ல திட்டத்துடன் புரட்சிப்பாதையில் சென்று, கூடிய சீக்கிரத்தில் திராவிடநாடு திராவிடருக்கு ஆக்கப்போகிறது. திராவிடம் உலகிலேயே தலைசிறந்த நாடாகவும் திகழப்போகிறது. ஆகவே மக்களனைவர்களும் புறப்பட்டு இக்கழகத்தை ஆதரிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்” என்று தனது உரையை முடித்துக்கொண்டார்.

கு. ப. இராமலிங்கம்

பின்னர் தோழர் கு. ப. இராமலிங்கம் அவர்கள் தி. மு. கழகக் கொடியின் நோக்கத்தையும் தபோதய நாட்டின் நிலைமையையும் கழகத்தில் இப்போது முன்னேற்றம் கண்டதற்கு அறிகுறியாககொடியின் சிவப்புச் சின்னமும் பெரிதாக்கி இருப்பது பற்றியும் இனி மக்கள் இக் கொடியின் கீழ் ஒன்றுபட்டுத் தாங்கள் முன்னேற்ற பாதையில் செல்லவேண்டுமென்றும் கூறி, தி. மு. கழகக் கொடியை உயர்த்தினர்.

ஜி. என், ராசு

பின்பு கழகத்தைத் துவக்கி வைத்துப் பேசிய கோபித் தோழர் ஜி என். ராசு அவர்கள் கூறியதாவது:— பகுத்தறிவு சிந்தனையை எங்களுக்கு ஊட்டினர் பெரியார். அதே பகுத்தறிவுச் சிந்தனையின் விளைவுதான் தற்சமயம் நாங்கள் கண்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகமும் அதன் அவசியமும். திராவிடர் ஆரியர் இனப்பிரிவுதான் நமது அடிமைப் புத்தியை நாட்டைவிட்டே பறந்தோடச் செய்யும். தற்போது நம்மை மனுநீதி சட்டம்தான் ஆள்கிறது. பதவி வெறியால் இனி அடுத்தபடியாக வேறு கட்சிப் பதவிக்கு வந்துவிட்டால் தங்கள் கதி என்னவது என்று நினைத்து இனி நாட்டில் எதிர்க்கட்சிகளே இல்லாமல் ஒழித்துவிட்டால், தாங்கள் நிம்மதியாக வாழ முடியும் என்ற கருதி தன், தற்சமயம் நாடு பூராவும் மந்திரிகளும் காமராசரும் போலீஸ் புடைசூழ பவனிவந்து இன்டல் பேச்சுபேசவதும் மிரட்டுவதுமாக இருக்கிறார்கள் அதனுல் அவர்களுடைய நோக்கம் நிறைவேறமுடியுமா? மாறாக மக்கள் இன்று எழுச்சி பெற்று காங்கிரசை விட்டு, மாற்றுக்கட்சியினரை ஆதரித்து வருவதே தக்கசான்றாம். சட்டசபை மிதுார் ஆரியர் திராவிடர் பிரச்னை வந்து விட்டது காங்கிரஸ் சட்டசபைக்கட்சித் தலைவர் சோழவில பிரகாசம் ஒன்று பார் பாலபரிவைக்ஷ இல் தேசியத்தோழர்கள் வெளிப்படையாகவே சொல்லிக்கொண்டதும் அது சமயம் சு. ம. காரர்களாகியவர்கள் செய்தஉதவியையும் நடு அதித்தே ஆதாரம் கழகத்தின் பிளவில்கோவைக் சுப்பையா போன்ற சில தேசியத்தோழர்கள் பேசும்பொழுது இந்த சமயத்தில் தான் காங்கிரஸைப் பலப்படுத்த வேண்டுமென்று பேசுகிறார் அதி நட வாதகாரியமாகும் இந்த நம்மை எல்லாம் தக்கிணியில் தூக்கிச்சொல்லி விட்டுப் பிரகாசம்காரு ன்று மகனை செலுத்தி ஒழிக்க நுண்மை பெற அமெரிக்காவிற்கு அனுப்புவதும், பண்டித விஜயலக்ஷிமியின் மகனை அரசியல் அறிவு பெற அமெரிக்காவிற்கு அனுப்பி விட்டு இந்த நமக்கு காந்தியின் அஹிம்சை தத்துவம் போதிப்பதும்தானா? உதவாக்கரைக் கதர் திட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் செலவு செய்வதும், மது விலக்குப்பிரச்சாரத்திற்கென்று 400 காங்கிரஸ்காரர்களை நியமித்து மாதம் ரூ 100 அவர்களுக்குச் சம்பளம்கொடுப்பதும், மூக்கியவரி இனங்களை எல்லாம் மத்தியசர்க்காருக்குக் கொடுத்து விட்டு நல்ல திட்டங்களுக்கு செலவு செய்ய சஜானவில் பணமில்லை என்று ஊளையிடுவதும், நமது ஆளவந்தார்களின் கடமை தானா? அரசியல் அரிச்சுவடி தெரியாத காங்கிரஸ்காரர்களின் வீராப்புக்கு, மட்டும் குறைச்சலில்லை. ஆளவந்தார்கள் இன்று மிக பலம் கொண்ட பவனி வருவதும், தொழிலாளர் கூலிஉயர்வு கேட்டால் தடிகொண்டுதாக்குவதும், அரசி மற்றுமுள்ள அங்கிய நாட்டுக்கெல்லாம் அனுப்பி அவர்களுக்கு அரசாங்க பணத்தை அள்ளிக் கொடுப்பதும், வட நாட்டு அகதிகளுக்கு வாரிக்கொடுத்து விட்டு கடல் கடந்துவதியும் திராவிடம் பெருங்குடி மக்கள் நிலைமை பற்றி சிந்திக்காமலிருப்பதும் நாட்டுக்கு ஏற்படவிருக்கும் அபாயக் குறிகளே யாகும். இத்தகைய காரியங்களைப் போக்கவும், நாட்டின் நலிவு நீங்கி நல்லதொரு சுதந்திரக் குடியரசு அமைக்க திராவிடநாடுதனியாகப் பிரிய பாடுபடுவது திராவிட முன்னேற்ற கழகமே. பாட்டாளித் தோழர்களுக்கும், பாமரமக்களுக்கும் முற்போக்குக் கருத்துள்ள தேசியத் தோழர்களுக்கும் இனி பாதையாக விளங்கும் தி. மு கழகம். மக்கள் தி. மு. கழகத்தினர் முயற்சிக்குப் பேராதரவு தரவேண்டும்” என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

சி. பி, சிற்றரசு

பின்னர்தோழர் சி.பி. சிற்றரசு அவர்கள் பேசும்பொழுது குறிப்பிட்டதாவது:—

இன்றைய சர்க்கார் மதுவிலக்குப் பிரசாரத்தால், மது இருக்குமிடம் தெரியாத மதுக்குடியர்களுக்கு மது இருக்குமிடம் தெரிய உதவுமேயொழிய மதுக்குடி நாட்டைவிட்டு அகலாது. திராவிடநாடு பத்திரிக்கை ஜாமீன் உயர்நீதிமன்றத் தீர்ப்பு எதிரிகளுக்கும், பாரப்பனீயத்திற்கும் தக்க படிப்பினையாகும். தி. மு. க. எழுத்துக்கு மறுப்பு எழுதாமல் காமராசரின் கட்டைவிரல் ஒடிக்கும் பேச்சு நாகரிகமாகுமோ ஏற்கக்கூடியதா? சொங்கர் இலட்சியவாதிகள்; கட்டைவிரல் போயினும் மற்ற விரல்களில் எழுதுவோர். ஒவ்வொரு நாட்டிலும் குறிப்பிட்ட மூலப்பொருள்தான் இருக்கிறது; ஆனால் நமது திராவிடத்தில் சகலமூலப்பொருள்களும் நிறைந்தவசதியிருந்தும்பேரும் போன்றவர்கள் அமெரிக்கர்களை இங்கு அழைத்து மூலதனம் போடச் செய்து, நமது மூலப்பொருள்களை வேறு நாடுகளுக்கு அனுப்பிவைப்பது இந்நாட்டில் பொருளாதாரச்சீர்கேடு நிலைவிப்பதாகும். இவைகளுக்குத் தக்க மருந்து திராவிடநாடு பிரிந்து வடநாட்டுச் சுரண்டல் ஒழிவதுதான் என்று கூறி மழையின் காரணமாக இத்துடன் தனது உரையை முடித்துக் கொண்டார். பின்னர் திருச்செங்கோடு தோழர் என். கே. பி. வேல் அவர்கள் நன்றி

வெளிவருகிறது!

“புராக்ரஸ்”

திராவிடர் ஆங்கில வார வெளியீடு

ஆசிரியர்: C. N. அண்ணுத்துரை M.A.,

தனிப் பிரதி அணு 1. — வருடசந்தா ரூ. 3

முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை

விவரங்கட்கு:—

“மாலை மணி” பதிப்பகம்,

சென்னை—1.

ஜமீன் ஒழிப்புப் பெயரால் மோசடி வித்தைவேண்டாம்!

லட்சுமணபுரி சட்டசபை முன்பு 50 ஆயிரம் கிசான்கள் ஆர்ப்பாட்டம்

—(0)—

மக்கள் மன்றத் தீர்ப்பு சட்டசபைக் கதவில் ஒட்டப்பட்டது!

‘தீர்வையைப் பத்து மடங்காக்கி ஜமீன்தாரிகளை ஒழிப்பதாகக் கூறுவது மோசடி. அந்தத் தொகையைக்கொடுக்க கிசான்களால் முடிய வில்லை”

என்று ஐ. மா. சோஷலிஸ்டு கட்சி செயலாளர் தோழர் தாமோதர் ஸ்வரூப், அண்மையில் லட்சுமணபுரியில் நடைபெற்ற கிசான்கள் ஊர்வலத்தின் போது சட்டசபை முன் கூடிய கூட்டத்தில் தெரிவித்தார்.

இங்ஙனம் ஐ. மா. அரசினர் ஜமீன்தாரி முறைஒழிப்பு என்ற பெயரில் செய்யும் மோசடியைக் கண்டிக்க, 47 ஜில்லாக்களிலிருந்து வந்திருந்த 50 ஆயிரம்கிசான்கள் சட்டசபை முன் கூடி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மாகாணம் முழுவதும் ஜமீன்தாரி முறை ஒழிப்பை அமுலுக்குக் கொண்டுவந்து ஜமீன்தாரர்களுக்கு நஷ்ட ஈடு தருவதற்காக ஐ. மா. சர்க்கார் முயற்சி செய்தனர். நஷ்ட ஈடு தரும் பிரச்சினையை சர்க்கார் கைவிட வேண்டும் என்பதே கிசான்களின் கோரிக்கை.

இந்தக் கோரிக்கையை அடிப்படையாகக்கொண்டு மாபெரும் ஊர்வலம் ஒன்று புறப்பட்டு சட்ட சபைக் கட்டிடத்தை அடைந்தது. மக்கள் தமது குறையை எழுதது மூலம் பிரதம மந்திரியிடம் தர முயன்றனர். ஆனால், பிரதமர் சட்டசபையில் இல்லாததால் அந்த முறையீடு சட்டசபைக் கதவின்மீது ஒட்டப்பட்டது.

பின்னர், அமீனாபாத்தில் கிசான்கள் கூட்டத்தில் தோழர் ஆச்சாரிய நரேந்திரதேவ் பேசினர். அவர் பேசுகையில, இத்தகைய ஒரு அணிவகுப்பினுல் கிசான்களிடையே புத்துணர்ச்சி ஏற்பட்டிருப்பதாகவும், இம் மாதிரி 50 ஆயிரம் கிசான்களை ஒன்று சேர்க்கும் சக்தி சர்க்காருக்கு இருக்குமானல், தான் தனது பதவியை விட்டு விலகிவிடுவதாகவும் சவால் விடுத்தாராம்.

இக்கூட்டம் இரவு 9-மணிக்கு இனிது முடிந்தது.

கூட்டத்திற்கு ஒலிபெருக்கி அமைக்கப்பட்டிருந்தது. கூட்டத்தில் இதுவரை வேறு எக்கட்சியின் கூட்டத்திற்கும் வராத மக்கள் இக் கூட்டத்திற்குமட்டும் திரண்டுவந்து கண்டுகளித்தது இருந்து குறிப்பிடத்தக்கது. (வி-உ)

வாடகைக் கட்டுப்பாடு

விரைவில் விரிவான மசோதா வெளிவரும்

வீட்டு வாடகைக் கட்டுப்பாடுமசோதாநேற்று சென்னை அசம்பிளியில் சட்டமாகநிறைவேற்றப்பட்டது.

விவாதத்திற்கு மந்திரி சஞ்சீவி ரெட்டி பதிலளிக்கையில் உறுப்பினர்கள் தெரிவித்த யோசனைகளையும், முன்னர் செலக்ட் கமிட்டி கூறிய சிபார்சுகளையும் கருத்தில் கொண்டு கூடிய விரைவில் விரிவானதொருமசோதா கொண்டு வருவதாக வாக்களித்தார்.

வாக்காளர் பட்டியல்

வயது வந்தோருக்குஓட்டுரிமை அடிப்படையில் கணக்கிட்டுப் பார்த்தால் வாக்காளர்கள் சுமார் 16 கோடி பேராகின்றனரென்றும், இவர்களின் பெயர்களைக் குறிக்க 20”க்கு 34” அளவில் சுமார் 20,00,000 ‘புல்ஸ்கேப்’ தாள்கள் தேவைப்படுமென்றும் அரசியலமைப்பு சபைத்தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் 26-ந்தேதியன்று சபையில் தெரிவித்தார். இவற்றைச் சேர்த்து ‘பைண்டு’ செய்தல், 200 கஜ உயரமிருக்குமென்றும் அவர் கணக்கிட்டுக் கூறினர்.

‘நேஷனல் கால்’

சென்னை, நவ. 25-

இன்று காலை தோழர் எம். ஜி. இலட்சுமண தாஸ் சென்னைப் பிரதம மாகாண நீதிபதி முன்னிலையில், ‘நேஷனல் கால்’ என்ற ஆங்கில வார இதழை சென்னையிலிருந்து வெளியிடும் ஆசிரியராகப் பதிவு செய்துகொண்டார்.

சுயராஜ்யப் பித்தலாட்டம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சை, அரசியல் வகுத்த அம்பேத்கார் தேசிய சர்க்காரின் சட்ட மந்திரி அம்பேத்கார், அரசியலமைப்புச்சபையில் தேசபக்தர்கள் நடுவில் உலகமெங்கும் கேட்கும் வகையில் பேசலாமா? இது நம்பிக்கைத் துரோகமல்லவா? நாட்டைக் கெடுக்க நினைக்கும் நாசகாரக் கும்பல், ஒன்றுந் தெரியாப் பொதுமக்கள் மத்தியில் தங்கள் சொந்த லாபத்துக்காகப் பேசவேண்டிய பேச்சல்லவா, இது! இதைப்போல் அம்பேத்கார் பேசலாமோ? அரசியலில் தான் எல்லா சுதந்தரத்துக்கும் இடமிருக்கிறதே! மதச் சார்பற்ற, ஜனநாயக சமத்துவ அரசியலன்றோ நாம் வகுத்திருக்கிறோம்! இதையுந் தவிர இன்னும் சுதந்தரங்கள் வேண்டுமென்று கூறுவது 'நம்ம சர்க்காரை' அவமதிப்பதாகாதோ! இந்நாட்டை இருட்டறையில்வைக்க நினைக்கும் 'தேசியத் தலைவர்கள்' இப்படியெல்லாம் பிரலாபித்து, ஒப்பாரி வைத்துத் துடிதுடித்துப் போயிருப்பார் அன்றோ! என்ன செய்வது? மனிதனின் 'தராதரத்தைப்' பாராமல் அவரைக் கொண்டு வந்து தங்கள் மத்தியில் உட்காரவைத்துக் கொண்டால்...!

இக்கால சாணக்கியரென்று எல்லோராலும் போற்றப்படும் தேர்ச்சியும் திறமையுமிக்க ஆச்சாரியார்தான் யோசனை கூறினார் அம்பேத்காரே அரசியல் வகுக்க வல்லாரென்று அன்புக்குரிய நேருவும் மரியாதைக்குரிய பட்டேலுந்தான் சபாஷ், சபாஷ், என்று கூறி அம்பேத்காரை அழைத்து அமர்த்தினர் அந்த மனுஷனும் பசுப்போல இருந்து, இதுநாள் வரை நாம் சொன்னதற்கெல்லாம் தலையாட்டிக் கொண்டே வந்து, நம்மனதுப்படியே அரசியலையும் எழுதிக் கொடுத்தார் இதோடு வாய்பேசாமலிருந்து விடுவாரென்றுதான் நினைத்தோம் ஆனால் இன்று-கடைசி நாளாகிய இன்று ஏதேதோ பேசி 'வினை' வைத்து விட்டாரே! எங்கு அடுக்குமிது! என்று ஆளும்வர்க்கமும் பக்கமேளங்களும் பரிதவிக்கும் வகையிலேயே பேசிவிட்டார் அம்பேத்கார்.

"1950-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ந் தேதி இந்தியமக்கள் சுயராஜ்யத்தில் குடியேறப் போகின்றனர்; சுபீட்சம், சுமுகம், இன்பம் இன்னபிற எல்லாம் 'வாஷிக்கப்போகிறது' "அன்று முதல்,' என்று தேசியத் தலைவர்கள் தொண்டைக் கிழியக் கத்திவருகிற நோக்கத்தில், நாட்டவரும் நம்பிக்கை நட்சத்திரத்தை நோக்கிக் கொண்டிருக்கிற நேரத்தில் சட்ட மந்திரி அம்பேத்கார், அரசியல்வகுத்த அம்பேத்கார், "முரண்பாடுகள் நிறைந்த வாழ்வில் நுழையப்போகிறோம் 26-ந் தேதியன்று; ஒன்றில்தான் சமத்துவம், ஏனைய இரண்டில் ஏற்றத்தாழ்வே" என்று அதிகாரபூர்வமாகக் கூறினால், நாட்டவர் என்ன நினைப்பார்கள் 'நம் தலைவர்களை'ப் பற்றியும். அவர்களது 'நல்லெண்ணத்தை'ப் பற்றியும் நமக்கு வந்துள்ள 'சுயராஜ்யத்தை'ப் பற்றியும்! உள்ளபடியே, இந்த அம்சம்தான் அவர்களது உள்ளத்தை உறுத்தக் கூடியதாகும்.

தேசியத் தலைவர்களின் தில்லுமுல்லுகளுக்கும் பித்தலாட்டங்களுக்கும் நான் ஆட்பட முடியாது' என்ற தகைமையில் தெள்ளிதின் அமைந்துள்ளது டாக்டர் அம்பேத்கார் சொற்பொழிவின் இறுதிப் பகுதி. 'அரசியல் வகுத்துத் தரக் கேட்டுக்கொண்டார்கள். அவர்களுக்கு வசதியின்மையால் அவர்கள் மனப்போக்குக்கேற்ப ஏதோ தயாரித்துத் தந்தேன் அதற்காக உண்மையை மறைக்கவோ, மாற்றவோ திரிக்கவோ என் மனம் சம்மதிக்காது. உகுத்த அரசியலில் உள்ள குறைபாடுகளை எடுத்துச் சொல்லித்தான் தீர வேண்டும் அது என் கடமை இல்லையேல், உலகம் என்னைப் பழிதூற்றும் மக்கள் கடிவர். நான் வகுத்துதவிய அரசியல், அரசியல் சுதந்தரத்தை மட்டும் சித்தரிப்பதே, சிறப்பிப்பதே யாகும்! பொருளாதார சுதந்திரம் சமுதாய சுதந்திரம் இன்னபிறவற்றுக்குத் துணையும் அதில் நிபந்தனையளிக்கப்பெறவில்லை. இவ்விருபெரும் சுதந்தரங்கட்கும் இனித்தான் வழி செய்தாக வேண்டும்; செய்யாவிட்டால் அழிவே" என்ற பொருளில் தெற்றென விளக்கிக் காட்டியுள்ளார் அம்பேத்கார். தேசியத் தலைவர்களாவது தேசியத்தின் பேரில, தங்கள் ஸ்தாபனத்தின் பேரில் சாக்குப் போக்குக் கூறித் தப்பிக் கொள்ளலாம், அம்பேத்கார் அப்படிச் செய்ய முடியாதே; அப்படிச்செய்யவேண்டிய அவசியத்திலும் அவர் இல்லையே. எனவே, நிலைமையைத் தெளிவுடன், எதிர்காலம் தன்னைத் தூற்றுமல' பகுவதுடன உண்மையை உணர்ந்து விட்டார்.

டாக்டர் அம்பேத்கார், 'எதிர் காலம்' பற்றிப் பேசியிருக்கும் ஒவ்வொரு சொற்றொடரும் அறிவார்வமும், கருத்து வன்மையும், உண்மைச் செறிவும் கொண்டு விளங்குகிறது. இவ்வுபகண்டத்தின் கடந்த கால வரலாற்றை எடுத்துக்காட்டி, அவ்வரலாறு மீண்டும் சுழன்று வரலாகாது என்று அவர் எச்சரித்துக் கூறுவதுபொறுப்புணர்ச்சியினுடையவும், நல்லெண்ணத்தினுடையவும் சிகரமாகத் திகழ்கிறது. 'மகமதுவின் காஸிமின் படையெடுப்புக்குதவியது யார்? மகமது கோரியை அழைத்தது யார்? சிவாஜியை சிரழித்தது யார்? பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்குத் துணை செய்ததுயார்?" என்றுகேட்டு, 'இவ்வரலாறுமீண்டும்தொடருமா? இதுவே எனக்குக் கவலை மிகத் தருகிறது' என சஞ்சலப்பட்டுள்ளார் டாக்டர் அம்பேத்கார் அவர் பெற்ற சஞ்சலத்துக்குக் காரணம், அந்நிய ஆதிக்கங்களுக்கெல்லாம் வழி வகுத்துக் கொடுத்த சக்திகள் இன்றும் இந்நாட்டைஉரிமையாக்கொண்ட சக்திகளாக இருப்பதால்தான்! சுதந்திரக் களிமயக்கத்திலிருக்கும் தேசபக்தகுழாமங்களுக்கு இது, அம்பேத்கார் விடுக்கும் எச்சரிக்கையாகும்.

டாக்டர் அம்பேத்கார் அதோடு விட்டாரில்லை. ஆகஸ்ட் 'காலித்தனத்துக்கு அரசியல் போராட்ட வர்ணம் தீட்டி, காந்திபஜனையை, நேரு-பட்டேல் நாமாவளியை அரசியல் சூத்திரமாகக்கொண்டு, அர்த்தமற்ற சுயராஜ்யத்தைப் பூரணத்துவப் நிறைந்ததெனக் கூறிக் கொட்டமடித்துவரும் கும்பலின் தலையில் 'நறுக்கு', 'நறுக்கு' என்று மூன்றுகுட்டுகள்' போட்டிருக்கிறார் அம்பேத்கார்.

அம்பேத்கார் கூறினார் :—

'சட்ட வரம்புக்குட்பட்டே கிளர்ச்சிகள் இருக்கவேண்டும். சட்ட மறுப்பு, ஒத்துழையாமை, சத்தியாக்கிரகம் என்பவையெல்லாம் நியாயமான முறைகளை மேற்கொண்டு பார்த்த பின்பு செய்யக்கூடியவையாகும். வேறு முறைகளிருக்கும்போது இவற்றை மேற்கொள்வது அர்த்தமற்றதாகும்.'

"பக்தி யென்பது மதத்துறையில வேண்டுமானால் ஆன்மா இலாபத்துக்குத் துணைசெய்யும். அரசியலில் 'பக்தி' அல்லது 'பெரியோரைப் பூஜித்தல்' என்பது அடிமைத்தனத்துக்கு, அதையொட்டி சர்வாதிகாரத்துக்கு வழிவகுப்பதே யாகும். வேறெந்தநாட்டையும்விட இந்தியாவுக்குத்தான் எச்சரிக்கை மிகவும் அவசியமாகும். ஏனெனில், இந்திய அரசியலில்தான் இப 'பக்தி' முறை தலைவிரித்தாடுகிறது. நாட்டுக்கு நல்லது செய்த பெரியோர்களுக்கு நன்றி செலுத்த வேண்டியதுதான். ஆனால், அதற்கொரு அளவுண்டு. பெண்ணொருத்தி தனது கற்பைப் பலியிட்டு, தனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ள வேண்டியதில்லை; அதுபோலவே நாட்டு மக்கள் தங்களது விடுதலையை பலியிட்டு நன்றிசெலுத்தத் தேவையில்லை."

"மூன்றாவதாக, அரசியல் ஜனநாயகத்தைக் கொண்டு மட்டும் நாம் வாளாயிருந்து விடக்கூடாது. சமூக ஜனநாயகத்துக்கும் பாடுபட வேண்டும். இந்திய சமுதாயத்தில் இருபெருங்குறைபாடுகளிருக்கின்றன. ஒன்று, சமூகத்துறையில் உயர்வு-தாழ்வு. இரண்டு பொருளாதாரத்துறையில் ஒரு பக்கம் செல்வக் குவியல், மறுபக்கம் பட்டினிப்பசி."

டாக்டர் அம்பேத்கார் இவ்வண்ணம் எடுத்துக்காட்டி, எக்காளமிட்டு நிற்கும் ஏகபோக ஆதிக்கக் கும்பலின் மண்டையிலடித்திருக்கிறார். டாக்டரவர்களின் நாட்டு நிலை பற்றிய படப்பிடிப்பு தேசிய காங்கிரஸாருக்கு நல்லதொரு எச்சரிக்கையாகவும், உரிமையார்வங்கொண்டு நிற்கும் சமுதாயத்தின் அறைகூவலாகவும் திகழ்கிறது. அரசியல் வகுத்த அம்பேத்காரே விஷயத்தைப் 'புட்டு, புட்டு' அம்பலமாக்கி விட்டாராகையால், 'தேசிய அரசியல் புராணீகர்கள்' வாயடங்கிவிடுமெனப் பெரிதும் நம்புகிறோம். மக்களை எந்த முகத்தால் பார்த்து, எதைச் சொல்லியழுது, அடுத்த தேர்தலுக்கு 'வோட்டு', வாங்கப் போகிறார்களோ, நாமறியோம் பராபரமே!

இனி நடப்பவை

திருவண்ணாமலை — இங்கு 25—11—49 முதல் நடந்துவரும் அகில இந்திய சுதேசி கைத்தொழில் விவசாயப் பொருட்காட்சியை ஒட்டி, 29—11 49 மாலை 6 30 க்கு திருச்சூர் பிரேமாவதியின் நடனமும், 30—11—49 மாலை 6-30 மணிக்கு உயர்நிலைப் பள்ளி மாணவர்களால் "பிரதிக்ஞை" நாடகமும் நடைபெறும்.

* * *

மதுராந்தகம்— இவ்வூர் தி. மு. க. கிளையின் சார்பில் 30—11—49 புதன் மாலை 6 மணிக்கு ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, தோழர் எம். சின்னையா அவர்கள் தலைமையில் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ; காஞ்சி. மணிமொழியார், என். வி. நடராசன், பத்மன் செல்லப்பன் ஆகியோர் சொற்பொழி வாற்றுவர்.

● ● ●

திமிரி—இவ்வூர் தி. மு. க. கிளையின் சார்பில் 29—11—49 செவ்வாய் மாலை 6 மணிக்கு ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் சி பி. சிற்றரசு, ஆ. மணி எழிலன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

● ● ●

ஓரக்காட்டுப்பேட்டை— இவ்வூர் தி. மு. க. கிளையின் துவக்கவிழா 29—11—49 செவ்வாய் மாலை 4-30 மணிக்கு தோழர் காஞ்சி. மணிமொழியார் தலைமையில் நடைபெறும். அதுபோது தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம், ஏ; எம். சின்னையா, சி. பஞ்சாட்சரம், ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். தோழர் காஞ்சி. மேகாசனுல் "வேலைக்காரி" விமர்சனம் நடைபெறும்.

● * *

சென்னை- சிந்தாதிரிப்பேட்டை, கரும்புச்சட்டைக் கால்பந்து விளையாட்டுக் கழகத்தின் சார்பில் 29—11—49 செவ்வாய் மாலை 4-30 மணிக்கு சிந்தாதிரிப்பேட்டை பாலகிருஷ்ணபிள்ளைத் தெருவில் ஓர் கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர் என். வி. நடராசன் அவர்கள் 'இன உணர்ச்சி' என்பது பற்றி சொற்பொழி வாற்றுவார்கள்.

* * *

சென்னை— வில்லிவாக்கம் திராவிட முன்னேற்றக்கழக (கிளை) அமைப்புக் கூட்டம் 30—11—49 புதன்கிழமை மாலை 7 மணிக்கு தோழர் டி. எம். பார்த்தசாரதி அவர்கள் இல்லத்தில் நடைபெறும். கழக ஆர்வமுள்ளத் தோழர்களனைவரும் வந்து கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு, தோழர்சே. இறைமுடிமணி (அமைப்பாளர்) வேண்டுகிறார்.

* * *

உறையூர்—தோழர் தி. க. பாலகிருட்டினன்—தோழியர் பாப்பம்மாள் திருமணம், 30—11—49 புதன் அன்று கீழ 2-ஆம் வீதி, 3191 என்னுள்ள இல்லத்தில், கோவை, இளஞ்சேரன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் முருகு. சுப்பிரமணியம், டி. கே. சீனிவாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

சென்னை—சென்னை அப்துல் ஹக்கீம் இந்து முஸ்லீம் உயர்நிலைப் பள்ளியின் ஆசிரியர் கழகத்தின் கூட்டம், 28-11-49 திங்கள் மாலை 4-மணிக்கு தோழர் த. சே. உமாபதி எம். ஏ. எல். டி. அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர் துரைக்கண்ணு எம். ஏ. எல். டி. (தலைமையாசிரியர், சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளி, அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

சென்னை—பல்கலைக் கழக—கல்லூரி ஆசிரியர்கள் கழகத்தின் 4-வது ஆண்டு மாநாடு, நவம்பர் 29, 30 தேதிகளில் தாம்பரத்திலுள்ள சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் நடைபெறும், டை கல்லூரியின் தலைவர் டாக்டர் ஏ. ஜே. பாய்டு மாநாட்டைத் திறந்து வைப்பார். டாக்டர் ஆர். வைத்தியநாதசாமி (சென்னைப் பல்கலைக் கழகக் கணிதப் பேராசிரியர்) தலைமை வகிப்பார்.

● * *

குளூர்- தோழர் எஸ். கே. கருப்பண்ணன்-செல்வாம்பாள் திருமணம் 30 11—49 புதன் காலை 10 மணிக்கு ரெட்டிச்சாபாளையம், மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

* * *

மாயவரம்—தோழர் காந்தி (ஆர் எம். எஸ்) அவர்களின் துணைவியார் தோழியர் நீலாயதாட்சி 21—11—49 ல இயற்கையெய்தியதை குறித்து 30—11—49 புதன் அன்று காலையில் இறுதிச் சடங்கு ஆற்றப்படும்.

* * *

மாயவரம்—இசைவேளாளர் மத்திய கழகத்தின் இரண்டாவது ஆண்டுவிழா 30—11—49 புதன் மாலை 6 மணிக்கு மாயவரம் மேல வீதி, கெடம் பட்டுப்பிள்ளை இல்லத்தில் நடைபெறும். திருவிழந்தூர் சங்கீத வித்வான் தோழர் ஏ. கே. கணேசம் அவர்கள் தலைமை வகிப்பார்கள்.

வெளிவந்துவிட்டது!

'இனத்தூதன்' ஆசிரியர் 'சேரன்' தீட்டியது

சினிமா ஒழிக

ஆபாசமும், அசம்பாவிதமும் நிறைந்த சினிமா, நாட்டைச் சீர்திருத்தாது என்பதைவிளக்கும் நூல்.

விலை 4 அணா.

வியாபாரிகட்கு 25 ./. கழிவு உண்டு. வி. பி. சார்ஜ் தனி.

விபரங்கட்கு, கிராமி, கலைப்பண்ணை குளை, சென்னை—7.

அறிவிப்பு

ரெஜிஸ் முட்டை பவுடர், முட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி அயர்ந்த நித்திரை தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும். G பழனியப்ப முதலியார், மதுரை.

காலம் ஓடுகிறது; மனிதர்கள் பிறக்கிறார்கள்? சாகிறார்கள்! ஆனால் உலகம் உருப்படவில்லை.

சிந்தனை கேட்கிறது

விடியுமா?

ஆசிரியர்:வல்லிக்கண்ணன்

100 பக்கங்கள் கொண்ட உயர்ந்த பதிப்பு

இரு நிற ஆர்ட் ஜாக்கெட்

விலை ரூ. ஒன்று.

விற்பனைக் கழிவு 25./. — அனுப்பும் செலவு இனாம்.

கிடைக்குமிடம் : கலையகம், 14-A, குப்பையர் தெரு, — சென்னை-1.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street Madras-1